1993 மார்ச் 23] [திரு. பெ. பொன்னுசாமி,

4. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84ஆம் ஆண்டுகளுக்கான சிவில் அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த பதினேழாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை) யில் வேளாண்மை துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை.

5. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த நாற்பத்தேழாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் போக்குவரத்துத்துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய தொண்ணூற்று நான்காவது அறிக்கை.

நண்பகல் 12.00

8. அறிவிப்புகள்.

(அ) 1993-94'-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை மொழிவது குறித்து ஆளுநரின் செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993-94ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause 2 of Article 206 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, Bhishma Narain Singh, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants in advance to the Demands for the year 1993-94.

9. 1993-94 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993-94ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு- மாண்புமிகு நிதியமைச்சர்.